**தமன்கடுவ பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 20 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 19 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தமன்கடுவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிலே நடைமுறைப்படுத்தப்பட்ட வீதிகள் வாரம் செயற்திட்டத்திற்காக மகாண சபைகள் திணைக்களத்தினால் பெறவேண்டிய ரூபா 598,506 கடன்பட்டோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிலே செலவுக்காக 2018 ஆம் வருடத்திலே 09 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட மொத்தம் ரூபா 48,846 அட்டுறு செலவின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிலே தீர்த்து வைக்கப்பட்டிருந்த ரூபா 257,130 தொகையான கடன்கொடுத்தோர் மேலும் கடன் கொடுத்தோர் மீதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் கடன்கொடுத்தோர் அந்த பெறுமதியால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலுவையாக இருந்த நீர்க் கட்டண வருமானம் ரூபா 300,188 ஆக இருந்ததுடன், அது ரூபா 340,016 ஆக காட்டப்பட்டிருந்ததனால் கடன்பட்டோர் ரூபா 39,828 வால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிலே கொள்வனவு செய்யப்பட்டிருந்த 04 ஸ்பீக்கர் மற்றும் ரூபா 39,677 வான குப்பை கொட்டும் இயந்திரமொன்று மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 24,871 ஒரு வகைப் பணம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலுவையாக காட்டப்பட்டிருந்தமையால் கடன்பட்டோர் அந்த பெறுமதியில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(எ) 1994 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய வட மத்திய மாகாண நீதிமன்ற தண்டப்பணமாக மாற்றுவதற்கான நீதி சாசனம் பிரகாரம் 2017 ஒக்டோபரிலிருந்து திசெம்பர் வரையான காலத்திற்குரிய சபைக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் 2017 ஆகஸ்ட்டில் இருந்து திசெம்பர் வரையான காலத்திற்குரிய கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணங்கள் இனங்கண்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கர்டன் துணி, பிளாஸ்ரிக் கதிரை, பிளாஸ்டிக் குப்பை கூடை அடங்கலாக ரூபா 743,316 பெறுமதியான விடயங்கள் 56 இயந்திர உபகரணங்கள் என நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஐ) சபைக்கு உரிய 19 அலகுகளின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2016 ஆம் வருடத்தில் மற்றும் 2017 ஆம் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,404,525 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஐந்தொகையில் இயந்திர உபகரணங்களின் கீழ் மற்றும் கையிலுள்ள தொகையின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளதனால் கையிலுள்ள தொகை அந்த பெறுமதியில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஓ) சபைக்கு அதிகாரபூர்வமாக உரிமை மாற்றம் செய்யப்பட்ட பொலன்னறுவை ரவும் வீதியில் அமைந்துள்ள 02 ரூட் 9.54 பர்ச் காணியின் பெறுமதியை இனங்கண்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மாகாண சபைகள் திணைக்களத்தினால் திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக 2017 ஆம் வருடத்திலே வழங்கப்பட்டிருந்த MAJIC BLOKUN மற்றும் CIRCUIATION BURNER இயந்திரங்கள் இரண்டின் பெறுமதிகளை இனங்கண்டு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்படவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிலே 03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் படியான மீதிகள் மற்றும் அதற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகள் என்பவற்றுக்கிடையில் ரூபா 9,664,773 இணக்கமின்மை நிலவியது.

(ஆ) நிலையான சொத்துக்கள் கணக்கின் பெறுமதி மூலதன ஈடுபாட்டின் போது வருமானப் பங்களிப்பு செய்கின்ற கணக்கிற்கு சமமாக இருக்க வேண்டுமெனினும், அந்த இரண்டு கணக்குகளுக்குமிடையில் ரூபா 152,135,811 வேறுபாடொன்று நிலவியது.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்த அறவிடுவதற்கு உள்ள வேலைகளுக்காக ரூபா 2,699,837 பணம் 15 வருட காலங்களுக்கு அதிகபடியான காலமாக அறவிடுவதற்கும் மற்றும் சம்பள மீள் நிரப்புவதற்காக ரூபா 1,715,017 2014 ஆம் வருடத்திலிருந்து தீர்வு காணப்படாமல் உள்ளது.

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் இல்லாதிருந்தமை

தேவையான தகவல்களை சமர்ப்பிக்காமையால் ரூபா 490,902,154 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

### 1.3.5 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் 154 ஆம் பிரிவு | சபையின் அதிகார எல்லையினுள் இடம்பெற்ற காணி ஏலவிற்பனையின் போது அறவிடப்பட வேண்டிய 1 சதவீத வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1984 இன் 37 ஆம் இலக்க (திருத்தயமைக்கப்பட்ட) வினோத வரி உத்தரவு | சபையின் அதிகார பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சினிமா அரங்கிலிருந்து அறவிடப்படவேண்டிய வினோதவரி மீளாய்வாண்டிலேயும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் | சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி முன்னைய வருடத்தின் மற்றும் மீளாய்வாண்டின் காலாவதியாகியிருந்த 25 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் சம்பந்தமாக 2017 நவம்பர் 28 ஆந் திகதியாகியும் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் கோவை | |
| (i) விதிகள் இலக்கம் 59 இலிருந்து 63 வரை | சபையின் அதிகார பிரதேசத்திற்குள் கணக்கெடுப்பொன்றை நடாத்தி தொழிற்சாலை மற்றும் வியாபார சம்பந்தமான பட்டியலொன்றை தயாரித்திருக்கவில்லை. |
| (ii) 193 விதிகள் | ஒவ்வொரு வருமான விடயத்தின் கீழ் இடம்பெறும் மேலதிகம் அல்லது குறைவு மற்றும் ஒவ்வொரு செலவு விடயத்தின் கீழ் இடம்பெறும் மேலதிகம் மற்றும் சேமிப்பு சம்பந்தமான விடயங்களை |

| | | |
|---|---|---|
| | | தெளிவுபடுத்தும் கூற்றொன்று மீளாய்வாண்டிற்கான கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 203 விதிகள் | 2018 ஏப்ரல் ஆகும் போது 2017 ஆம் வருடத்திற்கான சொத்துக்கள் மற்றும் பொருட்கள் சம்பந்தமாக கணக்கெடுப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை என்பதுடன் 2016 ஆம் வருடத்தின் பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கையை 2018 சனவரி 19 ஆந் திகதி சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்தது. |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) | நிதிப்பிரமாணம் 396 | கொடுப்பனவிற்கு முன்வைக்கப்படாத 6 மாதங்கள் கடந்த ரூபா 326,945 பெறுமதியான 10 காசோலைகள் சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 880 | பிணை வைக்கப்பட வேண்டிய 10 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்கள் | |
| | 2015 திசெம்பர் 04 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் என்சீபீ/எல்ஜீ/ஏசி/04/01/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | அனுமதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச எரிபொருள் எல்லையை விஞ்சி மீளாய்வாண்டிலே மார்ச் மாதத்திலிருந்து மே மாதம் வரை சபையின் செயலாளரினால் 545 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 51,775 செலவிடப்பட்டிருந்தது. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 26,015,619 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,976,586 ஆக இருந்தது.

## 2.2 நிதிக்கட்டுப்பாடு

---

## 2.3 வருமான நிர்வாகம்

---

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

---

(i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2016 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி | 15,065,600 | 13,146,199 | 10,358,800 | 13,109,725 | 13,868,268 | 13,518,768 | 10,196,009 | 16,432,485 |
| (ii) | வாடகை | 17,195,045 | 13,856,554 | 14,166,659 | 696,361 | 17,268,549 | 15,610,263 | 15,493,020 | 813,604 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 5,180,100 | 5,145,689 | - | 18,847,685 | 6,000,000 | 9,204,257 | 750,310 | 27,301,632 |
| (iv) | ஏனைய வருமானம் | 8,270,300 | 12,077,607 | 8,729,751 | 11,137,939 | 12,000,000 | 11,424,367 | 20,143,075 | 2,419,231 |
| | | 45,711,045 | 44,226,049 | 33,255,210 | 43,791,710 | 49,136,817 | 99,757,655 | 46,582,414 | 46,966,952 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

---

மீளாய்வாண்டிற்காக சபையின் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 45,711,045, சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 44,226,049 மற்றும் சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 33,255,210 ஆகும். வருடத்தின் இறுதியில் நிலுவை வருமானம் ரூபா 43,791,710 ஆக இருந்ததுடன் இது சிட்டையிடப்பட்ட வருமானத்தின் படி 99 சதவீத அளவில் காணப்பட்டது.

### 2.3.3 வீதவரியும் வரியும்

---

கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலுவையாக இருந்த வீதவரி சம்பந்தமாக 160 சிவப்பு அறிவிப்புக்கள் எழுதப்பட்டு வருடான பரீட்சகர்களிடம் கையளிக்கப்பட்டிருந்த போதும் அது 2017 நவம்பர் 29 ஆம் திகதியாகும் போது 43 சிவப்பு அறிவிப்புக்கள் மாத்திரமே பங்கிடப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக வருமான பரீட்சகர்கள் வழங்குகின்ற பங்களிப்பு குறைந்த அளவில் நிலுவுவதாக அவதானிக்கப்பட்டன.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் அரச மற்றும் அரை அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,133,432 வீதவரியை அறவிடுவதற்கு போதுமான அளவு அவதானம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் வருடத்திலே இடம்பெற்ற திட்டமிடல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வீதவரி அறவிடப்படுகின்ற பிரதேசங்களில் 19 புதிய நிர்மாணங்களுக்காக வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 ஆம் வருடத்திலே திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரி மற்றும் வரி ரூபா 12,263,275 ஆக இருந்ததுடன் இது முன்னைய வருடத்திற்கு நிகராக 42 சதவீதத்தில் அதிகரித்துக் காணப்பட்டது.

**2.3.4 வாடகை**

(அ) மாகாண சபைகள் ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு முறையாவது மதிப்பிடப்பட்ட வரி வாடகை திருத்தங்களுக்குட்பட வேண்டுமெனினும் சபைக்கு சொந்தமான 05 கடைத்தொகுதிகளுக்கு 08 வருடங்களுக்கு முன்னர் மேற்கொண்ட மதிப்பீட்டை அடிப்படையாக வைத்து வாடகை அறவிடப்பட்டு வருகின்றது.

(ஆ) சபைக்கு சொந்தமான 25 கடைகளுக்காக செல்லுபடியான ஒப்பந்தமொன்று இல்லாமல் வாடகைகள் வழங்கப்பட்டிருந்தது.

(இ) கதுருவெல பஸ் தரிப்பிடத்திலே சபைக்கு சொந்தமான 118 கடைகளின் நிலுவையாக இருந்த வாடகை ரூபா 948,850 ஆக இருந்ததுடன், அதில் 6 கடைகள் இரண்டு வருடங்களுக்கு அதிகமான காலங்களாக நிலவுகின்ற நிலுவையாக இருக்கின்ற வாடகையான ரூபா 202,575 வை அறிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) பொலன்னறுவை சந்தைக் காணியில் புதிய இரண்டு மாடி கடைகள் கொண்ட கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக பழைய கடைகளை இடித்து அப்புறப்படுத்தும் போது 24 கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டி இருந்த ரூபா 81,250 வாடகை 04 வருடங்களுக்கு அதிகமான காலம் கடந்திருந்தும் அறவிடுவதற்கு சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) கதுருவெல பஸ் தரிப்பிடத்திலே சபைக்கு சொந்தமான கடைகளிலிருந்து சேகரிக்கப்படுகின்ற பணம் (Key Money) குறித்த ஒப்பந்தத்தின் படி 2004 ஆம் வருடத்திலிருந்து 04 வருடங்களுக்குள் செலுத்தி முடிக்கப்பட வேண்டுமெனினும், 23 கடைகளிலிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 1,111,674 பணம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 ஏனைய வருமானம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைச் சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட 06 ஹோட்டல்களின் வருமானத்தில் 1 சதவீதத்திற்கு அதிகரிக்காத வகையிலான கட்டணமொன்றை 2017 நவம்பர் 28 ஆந் திகதியாகியும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் வருடத்திற்கான குப்பை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) சபையின் அதிகாரப்பிரசேத்திற்குள் காணப்படுகின்ற முச்சக்கர வண்டி தரிப்பிடங்களிலிருந்து கட்டணங்களை அறவிட்டுக் கொள்வதற்காக உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் மொத்த நீர்க் கட்டண நிலுவை ரூபா 300,188 ஆக இருந்ததுடன், அந்த பணத்தை அறவிடுவதற்கு போதுமான அளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்கு அறவிடப்பட வேண்டிய குப்பை வரி ரூபா 3,111,000 ஆக இருந்ததுடன், அதற்குள் ரூபா 50,000 இற்கு அதிகமான நிலுவையான குப்பை வரியை செலுத்தாத 17 நிறுவனங்களும் அடங்குகின்றன. இந்த நிலுவை வரியை அறவிடுவது சம்பந்தமாக சபையினால் போதுமான அளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 நீதிமன்றத் தண்டப் பணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரினால் 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் பெறப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,419,232 ஆக இருந்ததுடன், 2017 ஒக்டோபரிடமிருந்து திசெம்பர் வரையில் பெறப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பந்தியின் பிரிவின் கீழ் பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக அவசியமான உப விதிகளின் பெறுமானத்தை இனங்காணப்பட்டிராததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியாகியும் 42 விடயங்களுக்காக உப விதிகள் கடைப்பிடிக்கப்பட்டிருந்தாலும் அங்கீகரிக்கப்பட்ட உப விதிகளின் படி நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த வேலைகளுக்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

கல்லேல்ல குப்பை கொட்டும் மத்திய நிலையத்திலே நாளாந்த குப்பை கொட்டும் நடவடிக்கைகளுக்காக போதுமான அளவு ஊழியர்களின் எண்ணிக்கை இல்லாமை, ஊழியர்களுக்கான போதுமான அளவு நலன்புரி வசதிகள் மேற்கொள்ளப்பட்டிராமை,

தேவையான கட்டிட வசதிகள் இல்லாமை போன்ற குறைபாடுகள் காணக்கூடியதாக இருந்தது.

**(ஈ) சுற்றாடல் பிரச்சினைகள்**

-----------------------------------------

பிரதேச சபைக்கு சொந்தமான கழிவு நீர் சுத்திகரிப்பு கட்டணமொன்று இல்லாமையின் காரணமாக சபையின் அதிகாரப் பிரசேத்திலே இடம்பெறுகின்ற வியாபார மற்றும் அரச நிறுவனங்களின் மலம் மற்றும் கழிவுநீர் மற்றும் கதுருவெல மீன் விற்பனை நிலையங்களின் கழிவுப்பொருட்கள் கலிபவுசர் மூலமாக கல்லேல்ல கழிவுப்பொருட்கள் முகாமைத்து மத்திய நிலையம் அமைந்துள்ள நிலப்பகுதியின் அண்மையிலுள்ள காட்டில் கொட்டப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன் இது சுற்றாடலுக்கும் சுகாதார பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

-----------------------------------------------------------

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கங்கள் சம்பந்தமான சபை அறிந்திருக்கவில்லை என்பதுடன், சபைக்கு உரித்தான நோக்கங்கள், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான தேவையான ஏற்பாடுகள், அதற்காக தேவையான ஊழிய பதவியணியினர் மற்றும் ஏனைய தொடர்புள்ள அரச நிறுவனங்கள் என்பவற்றை இனங்கண்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிலே சபையினால் வருமான விடயம் 05 இன் மூலமாக ரூபா 5,854,250 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தாலும் அதற்கான உப விதிகளின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

(ஆ) பொலன்னறுவை புதிய வியாபாரத் தொகுதியை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக, ஆலோசனை சேவையை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றிற்கு முனைந்திருக்கவில்லை. நிர்மாண செயற்திட்டம் முடிவடைவதற்கு முன்னரே ஆலோசனை நிறுவனம் ஆலோசனையைச் சேவையை வழங்குலை நிறுத்தியிருந்ததுடன் அந்த நிறுவனத்திடமிருந்து பெறப்பட வேண்டிய திட்டவரையறை பத்திரம் மற்றும் நிறை செய்யப்பட்ட விடயங்கள் மேற்பார்வையொன்று இல்லாததன் காரணமாக நிர்மாணப் பணி தாமதமடைந்திருந்தது.

(இ) வட கிழக்கு மாகாணச் சேவையை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் இசிபதன சிறுவர் பூங்காவை நிர்மாணிப்பதற்காக ரூபா 21,221,593 வும் மற்றும் வட மத்திய மாகாண சபையின் நிதியில் விளையாட்டு உபகரணங்களுக்காக (Play Item) ரூபா 4,000,000 செலவிடப்பட்டு 2017 பெப்ரவரி 17 ஆந் திகதி வேலைகள் முடிக்கப்பட்டிருந்த சிறுவர் பூங்கா 2018 ஏப்ரல் 10 ஆந் திகதியாகும் போது ஒரு வருட காலம் கடந்திருந்த போதிலும், அது பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 நவம்பர் 21 ஆந் திகதியிலிருந்து 2018 ஏப்ரல் 09 ஆந் திகதி வரை வீதி மின்விளக்கு பிரிவிற்கு கிடைக்கப் பெற்றிருந்த 73 முறைப்பாடுகள் சம்பந்தமாக அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) சபையின் இரண்டு முன்னாள் உறுப்பினர்களிடமிருந்து 03 வருடங்களுக்கு அதிகமான காலங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 14,000 வை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் 01 முதல் 07 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து அறவிடப்படாமல் காணப்படுகின்ற ஊழியர்களின் கடன் மீதிகளான ரூபா 163,415 வை அறவிடுவதற்கு எந்தவிதமான செயல்நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிலே மூன்றாம் நிலைக்குரிய 02 உத்தியோகத்தர்கள், இரண்டாம் நிலைக்குரிய 25 உத்தியோகத்தர்கள் மற்றும் ஆரம்ப நிலைக்குரிய 17 ஊழியர்களின் பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், இரண்டாம் மற்றும் ஆரம்ப நிலைக்குரிய 02 பதவிகள் மேலதிகமாகக் காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக 04 பேர்கள் சேவையில் உள்ளீர்க்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.

**3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் வாடகைக்கு வழங்கப்படுகின்ற புத்த மண்டபம், பெந்திவெவ லீலாரத்த விஜேசிங்க அரங்கம் மற்றும் ரஜரட நவோதய விளையாட்டு மைதானம் ஆகிய இடங்களில் இடம்பெற்ற செயல்முறை திட்டம் சம்பந்தமாக அந்த நிலையத்தின் பொறுப்பாளரினால் பதிவேடுகள் பராமரிக்கப்படாதிருந்ததுடன், காரியாலயத்தினால் பராமரிக்கப்படுகின்ற பதிவேட்டின் மூலம் வேறாக்கப்பட்டிருந்ததுடன் அந்த இடங்களை வாடகைக்கு வழங்கியது சம்பந்தமான தகவல்களை உறுதி செய்து கொள்வதற்கு கணக்காய்வின் போது முடியாதுள்ளது.

(ஆ) சபைக்கு சொந்தமான ஆயுர்வேத மருந்தக சாலை 3 இல் சிகிச்சையை பெற்றுக்கொள்ளும் நோயாளர்களின் எண்ணிக்கை 2016 ஆம் வருடத்திலே 13,367 ஆக இருந்ததுடன், 2017 ஆம் வருடம் ஆகும்போது 9,922 வரையில் குறைந்திருந்தது. மேலும், ஆயுர்வேத நடமாடும் மருந்தகம் இடம்பெறுதலும் மிகவும் கீழ் தரத்திலேயே இடம்பெற்றதுடன், மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக 2017 ஆம் வருடத்திலே பாதீட்டின் மூலம் ரூபா 450,000 ஒதுக்கப்பட்டிருந்தாலும், மீளாய்வாண்டிற்குள்ளே ரூபா 213,485 பெறுமதியான மருந்துகள் மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) சிங்கபுர நீர் செயற்திட்டத்தின் நீர் எந்தவிதமான சுத்தகரிப்பும் மேற்கொள்ளப்படாமல் விநியோகிக்கப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டிற்குள் நீர்ப் பரிசோதனை அறிக்கையை பெற்றிருக்கவில்லை.

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) சபையினால் 2017 ஆம் வருடத்திலே நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 25,646,542 க்கான கொடுப்பனவுக்கு உரிய 14 சாலை அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக இடப்பட்ட உள்ளக பிணைப்புக்கள் சம்பந்தமாக தரக் கட்டுப்பாட்டு அறிக்கை ஒப்பந்தக்காரரினாலேயே முன்வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் மூலமாக புதிய நகர வாரச்சந்தை வாடகைக்கு விடப்பட்டிருந்தாலும் 2017 ஆம் வருடத்திற்கு உரிய நீர் மற்றும் மின்சார செலவுகளான ரூபா 35,053 வை சபை செலுத்தியிருந்தது.

### 3.6 ஒப்பந்தக் கட்டுப்பாடு

2013 தேசத்திற்கு மகுடத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற ரூபா 20 மில்லியன் மற்றும் சபையின் நிதியத்திலிருந்து ரூபா 713,365 வை செலவிட்டு தமன்கடுவ பிரதேச சபை வாரச்சந்தை காணியில் நிர்மாணிக்கப்பட்ட 44 கடைகளின் வேலைகள் 2014 திசெம்பர் 22 ஆம் திகதியாகும் போது பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் ஆகும்போது கட்டம் நிர்மாணிக்கப்பட்டு 3 ½ வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், அதனை பாவனைக்கு உட்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதனால் கட்டிடம் மிக மோசமான அழிவுக்கு உட்பட்டிருந்தது. இந்த வியாபார தொகுதியின் சுவர் பகுதிக்கு பொருத்தப்பட்ட மேல் மாடியின் அனைத்து பீம்களிலும் நீர் கசிவுகள், சில இடங்களில் சுவர் வெடிப்புற்றிருத்தல், கடைகளின் மூடும் கதவுச் சட்டகத்தில் (பொறுத்தப்பட்டிருந்த துணை) கறல் படிந்து உடைந்திருததல் கீழ் மாடியில் பொருத்தப்பட்டிருந்த 9 Spot Lights) கள் மீண்டும் பாவனைக்கு உட்படுத்தமுடியாத நிலையில் சிதைவுற்று காணப்படுதல், மற்றும் ரூபா 3,280,752 செலவிட்டு பொருத்தப்பட்ட மூடும் கதவின் பிடித்துக்கொள்ளும் பெட்டி பாவனைக்குட்படுத்துவதற்கு முன்னரே முழுமையாக வேறாகியிருத்தல் போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டாலும் 2015 சனவரி 01 ஆந் திகதி ரூபா 452,777 ஆன கையிருப்புப் பணம் ஒப்பந்தக்காரருக்கு முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்தது.

### 3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் சந்தைக் காணியில் நிர்மாணிக்கப்பட்டு வாடகைக்கு விடப்பட்டிருந்த பழைய கடைகள் 2013 ஆம் வருடத்தில் உடைத்து அப்புறுப்படுத்தம் போது 13 கடை உரிமையாளர்கள் மின்சார சபைக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 33,847 வான நிலுவை மின்சாரக் கட்டணத்தை சபையினால் செலுத்தப்பட்டிருந்ததுடன், 04 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தும் அந்த பணத்தை அறவிட்டிருக்கவில்லை.

(ஆ) சபையிற்கு சொந்தமான 01 ஆம் இலக்கமுடைய உத்தியோகபூர்வ வாஸஸ்தலத்தில் 2017 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து குடியிருந்த செயலாளரிடமிருந்து அதற்காக நிறுவனக் கோவையின் முறைமையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய வாடகையை அறவிடப்படாமலிருந்ததுடன், எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றிற்கும் முனைந்திருக்கவில்லை.

(இ) நிறுவனக் கோவையின் xix ஆவது பிரிவின் 5.4 பந்தியின் பிரகாரம் அரசாங்க இல்லமொன்றில் குடியிருக்கும் சந்தர்ப்பங்களில் வேதனத்தில் 12.5 சதவீதம் அறவிடப்படவேண்டுமெனினும் மீளாய்வாண்டிலே இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 19,131 குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) பொலன்னறுவை நகரப் பூங்கா நிர்மாணிப்பு செயற்திட்டத்திற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக ரூபா 5 மில்லியன் ஏற்பாட்டை பெற்றுக்கொடுப்பதற்கான அனுமதியை பெற்றதனால் அடிப்படையான சுற்றாடல் அறிக்கையை பெறுவதற்காக வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்கு ரூபா 50,000 உம் திட்டமொன்றை (கட்டமைப்பு) பெற்றுக்கொள்வதற்காக நில அளவையாளர் நாயகம் திணைக்களத்திற்கு 16,800 உம் அடிப்படை சுற்றாடல் அறிக்கையை தயாரிப்பதற்காக கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ரூபா 855,000 உம் 2010 - 2012 காலப்பகுதிக்குள் செலவிடப்பட்டிருந்தாலும் உரிய செயற்திட்டம் செயற்படுத்தப்படாததனால் அந்த செலவுகள் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.8 வாகனப் பயன்பாடு**

சபைக்கு சொந்தமான வாகனங்கள் சம்பந்தமாக வாகன லொக் புத்தகம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்காக சபையினால் உள்ளக கணக்காய்வொன்றினை மேற்கொண்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

மீளாய்வாண்டிலே மற்றும் முன்னைய வருடத்திலே கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைத்து காலத்துக்குரிய கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அடிக்கடி சபையின் அவதானத்திற்கு உட்படுத்தப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | சொத்துக்கள் குறை உபயோகமாக காணப்படுதல். |
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானத்தை அறவிடாமை. |
| | | (ii) | வரி ஒப்பந்தங்கள் முறைப்படுத்தப்படாமை. |
| | | (iii) | பணம் சேகரித்தல் மற்றும் கணக்கிலிடுதல் நாளதுவரையாக்கப்பட்டிராமை. |
| (இ) | கடன் பட்டோர் / கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | சரியான முறையில் கணக்கிடுதல் மேற்கொள்ளப்படாமை. |
| | | (ii) | கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் தீர்த்து செய்யப்படாமை. |
| (ஈ) | உள்ளகக் கட்டுப்பாடு | (i) | உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாமை |
| | | (ii) | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் இடம்பெற்றிருக்காமை |